

தலைமைச் செயலகத்தில் நேற்று (19.10.2024) சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் எஸ்.எம்.நாசர் தலைமையில் சிறுபான்மையினர் நலத்துறை சார்பில் 2024 – 25 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்டுள்ள புதிய அறிவிப்புகள் மற்றும் செயல்படுத்தப்பட்டுவரும் இதர திட்டங்கள் குறித்து துறை உயர் அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாநில ஹஜ் குழு செயலாளர் மு.அ.சித்திக், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அரசு முதன்மைச் செயலாளர் சா.விஜயராஜ் குமார், மிகப்பிற் படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை ஆணையர் வா.சம்பத், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற் படுத்தப்பட்டோர் நலத் துறை அரசு கூடுதல் செயலாளர் முனைவர். சீ.சுரேஷ் குமார், சிறுபான்மையினர் நலத் துறை இயக்குநர் திருமதி ஆசியா மரியம், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தலின்படி

## சிறுபான்மையினருக்கான திட்டங்களை நல்ல முறையில் செயல்படுத்திடுவீர்!

### ஆய்வுக் கூட்டத்தில் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் அறிவுரை!

சென்னை, அக்.20-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி, சிறுபான்மையினர் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் சா.மு. நாசர், சிறுபான்மையி னர் நலன் குறித்த அறிவிப்புகள் மற்றும் இத்துறையின் கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து நேற்று (19.10.2024) தலைமைச் செயலகத்தில் ஆய்வு செய்தார்கள்.

இந்த ஆய்வு கூட்டத்தில் சிறுபான்மையினருக்கு வழங்கப்படும் கல்வி உதவித் தொகை திட்டம், கிராமப்புற சிறுபான்மை மாணவியர்களுக்காக ஊக்கத் தொகை வழங்கும் திட்டம், சிறுபான்மையினர் பள்ளி / கல்லூரி விடுதிகள், விடுதிகளில் வழங்கப்படும் வசதிகள், முஸ்லிம் மகளிர் உதவும் சங்கம், கிறித்துவ மகளிர் உதவும் சங்கம், ஜெருசலேம் புனித பயணத்திற்கான நிதியுதவி, சிறுபான்மையினருக்கு மின் மோட்டாருடன் கூடிய தையல் இயந்திரங்கள் வழங்குவது, கிறித்துவ தேவாலயங்கள் பழுது பார்த்தல் மற்றும் புனரமைத்தல், தொன்மையான தேவலாயங்கள் புனரமைத்தல், உலமாக்கள் மற்றும் இதரப் பணியாளர்கள் நல வாரியம், வக்ஃப் நிறுவனங்களில் பணியாற்றும் உலமாக்களுக்கு இரு சக்கர வாகனம் வாங்க மானியம் வழங்குதல், கிறித்துவ தேவாலயங்களில் பணிபுரியும் உபதேசியர்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம், தமிழ்நாடு சிறு பான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மூலம் வழங்கப்படும் கடன் திட்டங்கள் பற்றிய விவரங்கள், தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம், தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தின் மூலம் செயல்படுத்தப்படும் வக்ஃப் நிறுவனங்களுக்கு பெருமராமத்து மானியம் மற்றும் தமிழ்நாடு மாநில ஹஜ் குழு மூலம் தமிழ்நாடு ஹஜ் பயணிகளுக்கு ஹஜ் மானியம் வழங்குதல் ஆகிய திட்டங்கள் குறித்து ஆய்வு செய்யப்பட்டது.

சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் சிறுபான்மையினருக்கான திட்டங்களை நல்ல முறையில் செயல்படுத்திடுமாறு அறிவுரைகள் வழங்கினார்கள்.

ஆய்வுக் கூட்டத்தில் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை முதன்மைச் செயலாளர் முனைவர் சா. விஜயராஜ் குமார், தமிழ்நாடு மாநில ஹஜ் குழு செயலாளர் மற்றும் செயல் அலுவலர் மு.அ.சித்திக், அரசு கூடுதல் செயலாளர் முனைவர் சீ.சுரேஷ் குமார், சிறுபான்மையினர் நல இயக்குநர் மற்றும் தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழக மேலாண்மை இயக்குநர் திருமதி ஆசியா மரியம், தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத்தின் உறுப்பினர்செயலர் வா.சம்பத் மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

சரியான விலையில்

## தரமானப் பொருட்களை வழங்குவதே ஆவினின் நோக்கம்!

### அரசு செய்தி வெளியீடு!

சென்னை, அக்.20

தமிழ்நாடு அரசின் செய்திக் குறிப்பு வருமாறு:-

FSSAI அதிகாரிகள் கடந்த மார்ச் மாதம் தேனி மாவட்ட பால் பண்ணையை ஆய்வு செய்து சில அறிவுறுத்தல்கள் கொடுக்கப்பட்டது. அதை உடனடியாக நடைமுறைப்படுத்தப்பட்டு பதில் விளக்கம் கொடுக்கப்பட்டது.

அதற்கு பின்பு எந்த ஆய்வுக்கும் FSSAI அதிகாரிகள் தேனி பால்பண்ணைக்கு வரவில்லை. தற்பொழுது வெளிவந்துள்ள செய்தி முற்றிலும் உண்மைக்கு புறம்பானது.

தேனி ஆவினில் பால் கோவா மற்றும் பாதாம் பவுடர் மட்டுமே வாரத்தில் ஒரு நாள் மட்டுமே தயாரிக்கப்பட்டு வருகிறது. தீபாவளி பண்டிகைக்கு இனிப்பு மற்றும் காரவகைகள் திண்டுக்கல் மற்றும் மதுரை ஆவினில் இருந்தே வருகிறது. தேனி ஆவினில் தீபாவளி இனிப்பு வகைகள் தயாரிக்கப்படுவதில்லை.

ஆவினின் நற்பெயருக்கு களங்கம் விளைவிப்பதற்காக சிலர் வேண்டுமென்றே பழைய செய்திகளை பரப்பி வருகின்றனர். தரமான பொருட்களை சரியான விலையில் வழங்குவதே ஆவினின் நோக்கம்.

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மகளிர் சுய உதவிக்குழுக்கள் தயாரித்துள்ள பொருட்களின்

## “மதி தீபாவளி பரிசுப் பெட்டகம்” விற்பனை துவக்கம்!

### தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநர் தகவல்!

சென்னை, அக்.20-

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பில் செயல்படும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களின் “மதி தீபாவளி பரிசு பெட்டகம்” விற்பனை துவக்கம் என அதன் இயக்குநர் தெரிவித்துள்ளார்.

அவரது அறிவிப்பு வருமாறு:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கு தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ் செயல்பட்டு வரும் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களை விற்பனை செய்திட பல்வேறு விற்பனை வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவற்றின் தொடர்ச்சியாக விழாக்காலங்களுக்கு ஏற்ற வகையில் சுய உதவிக் குழுக்களின் தரமான தயாரிப்புப் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

தீபாவளியினை முன்னிட்டு தற்போது சுவையும் தரமும் நிறைந்த பல்வேறு இனிப்பு மற்றும் கார வகை தின்பண்டங்களைக் கொண்ட “மதி தீபாவளி பரிசுப் பெட்டகம்” (*Mathi Diwali Gift Hampers*) இணையதளம் மற்றும் கைபேசி எண் வாயிலாக மொத்தம் மற்றும் சிறிய அளவில் விற்பனை செய்யப்படுகிறது.

இந்தப் பரிசுப் பெட்டகத்தில், சிவப்பு அரிசி லட்டு, உலர்பழங்கள் லட்டு, கம்பு லட்டு, சோள லட்டு, ராகி லட்டு, கருப்புக் கவுனி லட்டு, கருப்பு உளுந்து லட்டு, நரிப் பயிர் லட்டு, தினை லட்டு, சாமை லட்டு மற்றும் ஆவாரம் பூ லட்டு ஆகிய லட்டு வகைகள், சாமை முறுக்கு, தேங்காய் பால் முறுக்கு, அரிசி முறுக்கு, கை முறுக்கு ஆகிய கார வகைகளும் 23.10.2024 வரை விற்பனை செய்யப்படுகிறது.

மேலும், தீபாவளிப் பண்டிகைக்கு பரிசளிக்க ஏற்ற வகையில் தஞ்சாவூர் தலையாட்டி பொம்மைகள், தஞ்சாவூர் ஓவியங்கள், மண்ணால் செய்யப்பட்ட விளக்குகள், கோரைப்புல்லில் செய்யப்பட்ட அலங்காரப் பொருட்கள் போன்றவையும் விற்பனை செய்யப்படுகின்றன.

தங்களுக்குத் தேவையான பொருட்களை வாங்கிட மற்றும் முன்பதிவு செய்திட “76038 99270“ என்ற கைப்பேசி எண்ணை அழைக்கவும்.

மேலும் தொடர்புக்கு மதி அனுபவ அங்காடி, அன்னை தெரசா மகளிர் வளாகம், வள்ளுவர் கோட்டம் அருகில், நுங்கம்பாக்கம், சென்னை - 600 034.

சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் தரமான பொருட்களை வாங்கி பயன்படுத்தி, சுய உதவிக் குழுக்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கு உதவிடுமாறு தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பில் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இவ்வாறு தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநர் தெரிவித்துள்ளார்.



# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம்

### இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழக இளைஞர் அணியின் மாவட்ட– மாநகர– மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் நியமிக்கப்பட்டு ஓராண்டைக் கடந்த நிலையில், அவர்களின் செயல்பாடுகள் குறித்து விரிவாக ஆய்வு செய்யப்பட்டது.

புதிய நிர்வாகிகளின் உதவியுடன் கழக இளைஞர் அணியின் 2–வது மாநில மாநாட்டை மிகச் சிறப்பாக நடத்தி முடித்தோம்.

கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி இந்த ஓராண்டு காலத்தில் ‘இல்லந்தோறும் இளைஞர் அணி’ உறுப்பினர் சேர்க்கை, கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு, சட்டமன்றத் தொகுதிக்கு ஒரு ‘கலைஞர் நூலகம்’ அமைப்பது, இளம் பேச்சாளர்களைத் தேர்வு செய்யும் வகையில், ‘என் உயிரினும் மேலான..!’ பேச்சுப் போட்டியை நடத்தி வருவது உள்ளிட்ட பல்வேறு பணிகளை மேற்கொண்டு வருகிறோம்.

இந்த நிலையில் திறக்கப்படாமல் இருக்கும் கலைஞர் நூலகங்களைத் திறப்பது, ‘என் உயிரினும் மேலான..!’ இறுதிப் போட்டியில் வெல்பவர்களுக்கு, கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் பரிசளிப்பு விழா, இளைஞர் அணியின் சமூக வலைதளப் பயிற்சி, ஒன்றிய–நகர–பகுதி–பேரூர்–களுக்குப் புதிய நிர்வாகிகளை அறிவித்தல்... உள்ளிட்ட இளைஞர் அணியின் பல்வேறு பணிகள் குறித்து, நிர்வாகிகளுடன் ஆலோசனை செய்ய உள்ளோம்.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் மாவட்ட– மாநகர– மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**கூட்டம் நடைபெறும் நாள், நேரம் குறித்த விவரம்:**

| நாள் | நேரம் | இடம் |
|---|---|---|
| 20.10.2024 ஞாயிற்றுக்கிழமை | மாலை 4 மணி | தீர்த்தமலை திருமண மண்டபம், கருப்பூர் பிரதான சாலை, வெள்ளக்கல்பட்டி, சேலம்-12. |

“அன்பகம்”
சென்னை – 18.
நாள் : 18–10–2024.

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி

## முதல்வருக்கு தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றம் நன்றி-பாராட்டு!

புதுக்கோட்டை, அக். 20–

அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு 50 சதவீதமாக உள்ள அகவிலைப்படியை 01.07.2024 முதல் 53 சதவீதமாக உயர்த்தி வழங்கப்படும் என தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பை தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றம் பெரிதும் வரவேற்கிறது! நன்றி பாராட்டுகிறது!

தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றத்தின் மாநிலப் பொதுச்செயலாளர் மன்றம் நா. சண்முகநாதன் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:–

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டின் ஆசிரியர்அரசு அலுவலர்களுக்கு தீபாவளி பரிசாக 50 சதவீதமாக உள்ள அகவிலைப்படியை 01.07.2024 முதல் 53 சதவீதம் என 3 சதம் அகவிலைப்படி உயர்த்தி அறிவிப்புச் செய்துள்ளவற்றை தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றம் பெரும் மகிழ்வோடு பெரிதும் வரவேற்று பெரும் நன்றி பாராட்டுகிறது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டின் அனைத்து வகை ஆசிரியர் அரசு அலுவலர்களின் எதிர்பார்ப்புகளையும் கோரிக்கைகளையும் விரைந்து நிறைவேற்றித்தந்து உதவிட வேண்டுமாய் எங்களது மாநில அமைப்பு பெரிதும் வேண்டி விரும்பிக் கேட்டுக்கெள்கிறது.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.




சென்னை பெசன்ட் நகர் எலியட்ஸ் கடற்கரையில், The ‘Men in Pink’ Walkathon “மென்ஸ் இன் பிங்க்” வாக்கத்தான், பெண்களுக்கான மார்பக புற்றுநோய் விழிப்புணர்வின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுவதற்காக தொடங்கப்பட்ட ஒரு முயற்சி. இந்த நிகழ்வில், திமுக துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி கலந்து கொண்டு வாக்கத்தானை கொடி அசைத்து தொடங்கி வைத்தார்.இந்த நிகழ்வு அப்போலோ கேன்சர் மையங்கள் மற்றும் அப்போலோ புரோட்டான் கேன்சர் மையத்தால் ஏற்பாடு செய்யப்பட்டது. மேலும் வாக்கத்தானின் நோக்கம், பெண்களுக்கான மார்பக புற்றுநோய் பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்துவதோடு, இந்த முயற்சியில் ஆண்களின் முக்கியமான பங்கையும் வலியுறுத்துவது ஆகும். இந்த வாக்கத்தானில் ஆண்கள், பெண்கள் மற்றும் பல கல்லூரி மாணவர்கள் என திரளானோர் கலந்து கொண்டனர்.